R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
May 2021

எமது
புதிய வெளியீடு
2013
ஆண்டு
வானொலி
மற்றும்
தொலைக்காட்சியில்
வெளி வந்த
தேவ செய்திகள்
Vol.7




வெளியிடுவோர்
வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

Our TV Program:
Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday 6.00 P.M on Tamilan TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan









தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 | மே 2021 | கனி 6

ஜெயமோ
கர்த்தரால் வரும்
நீதிமொழிகள் 21:31

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 18


தலைப்பு : பெத்லகேம் – Bethlehem

வேத வாசிப்பு : 1சாமுவேல் 17:15

1. இதன் முதற்பெயர் 'எப்பிராத்தா' - ஆதி.35:19
2. எருசலேமிலிருந்து 6 மைல் தூரம்
3. தாவீது பெத்லகேம் ஊரான் - 1சாமு.17:15

எங்கே அன்பு உண்டோ
அங்கே வாழ்வு உண்டு
எங்கே வாழ்வு உண்டோ
அங்கே நம்பிக்கையுண்டு





Where there is love
there is life
Where there is life
there is hope

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509








THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA





## வேத அறிவுப் போட்டி எண்: 249

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன் என்று கர்த்தர் எந்த தீர்க்கதரிசியை நோக்கி சொன்னார்?
2. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே எவருடைய சித்தமாயிருக்கிறது?
3. உன் அப்பத்தைச் சாப்பிட்டவர்கள் உனக்குக் கீழே கண்ணிவைத்தார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
4. தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும் இருப்பவன் யார்?
5. தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பக்கடவர்கள் என்ற ராஜா யார்?
6. சரீர முயற்சி எவ்வகையான பிரயோஜனமுள்ளது?
7. சூனிய வித்தைகள் உன் கையில் இராதபடிக்கு அகற்றுவேன்; நாள் பார்க்கிறவர்கள் உன்னிடத்தில் இல்லாமற்போவார்கள் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
8. ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல், கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்குக் கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. உன் நடுவில் இருக்கிற ஜனங்கள் பேடிகள் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு பேசினார்?
10. பவுல், யாரை குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படி கிரேத்தாதீவிலே விட்டுவந்தார்?

## வேதாகம ஆய்வு... 34 எஸ்தர் - Esther



1. நட்சத்திரம்
2. எஸ்தரை அவளுடைய சிறிய தகப்பன் வளர்த்தான் – எஸ்.2:7
3. இந்து தேசமுதல் எத்தியோப்பிய தேசம் வரையுள்ள 127 நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு எஸ்தரை பட்டத்து ஸ்திரீயாக்கினான் – எஸ்.2:17
4. சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்று நாள் அல்லும் பகலும் தனக்காக உபவாசம் செய்ய மொர்தெகாயைக் கேட்டுக்கொண்டாள் – எஸ்.2:16
5. என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக்கூடும் என்றாள்.
6. பூர் என்னும் சீட்டைப்போட்டு பூரீம் என்னும் பண்டிகைநாட்கள் யூதருக்குள்ளே நியமித்துக்கொண்டார்கள் – எஸ்.9:28

சிறுவர் பகுதி

## பெத்லகேம் - Bethlehem

வேத பகுதி: மீகா 5:2



அன்பான தம்பி தங்கைகளே, உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. இன்றைக்கு பெத்லகேமைப்பற்றி சொல்லப்போறேன். யூதோயா நாட்டிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே ஒரு சிறிய ஊராக பெத்லகேம் இருந்தது. இவ்வூருக்கு எப்பிராத்த என்ற பெயரும் இருந்தது. அது தாவீதின் வாழ்ந்த ஊராகவும் இருந்தது. இங்குதான் நம் ஆண்டவர் இயேசு பிறந்தார்.

உலகத்திலே எத்தனையோ இடங்கள் இருக்கிறது. இயேசு ஏன் இங்கே பிறந்தார் என்றால், எருசலேம் தேவனுடைய நகரமாயிருந்தது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அநேகர் இங்கே ஆட்சிசெய்தார்கள். இஸ்ரவேலர்கள் ஆதிமுதலாக இங்கே வாழ்ந்து வந்தார்கள் எனவே அதிலுள்ள ஆயிரத்திலே ஒன்றாயிருக்கிற ஒரு சிறு ஊராகிய பெத்லகேமில் இயேசு பிறப்பார் என்ற மீகா தீர்க்கதரிசன வாக்கின்படி இயேசு இங்கே பிறந்தார். இந்த செய்தி உலகத்திற்கு கிடைத்த நற்செய்தி.

எத்தனையோ ராஜாக்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் சிலர் தேவனுடைய சித்தத்தின்படி செய்தார்கள். அநேகர் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயல்பட்டார்கள். எனவே தேவன் இஸ்ரவேலை ஆளும் இரட்சகரை பெத்லகேமிலே எழும்பப்பண்ணினார். அவர் இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். அவருடைய ராஜ்யம் ஆவிக்குரியது. உங்களுக்கும் எனக்கும் அவர் இராஜாவாக இருக்கிறார். அவருடைய ஆளுகையின் கீழ் நாம் இருக்கிறோம். உலக அதிகாரங்களுக்கு நாம் கீழ்ப்பட்டவர்கள்தான் ஆனாலும் நம்மை ஆளுகிறவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே.

அவரை மரியாள் என்ற பெண் பெற்றெடுத்தாள். அது அவளுக்கு கிடைத்த பாக்கியம். எப்படி ஒரு சிறிய ஊரான பெத்லகேமை தெரிந்தெடுத்தாரோ அதைப்போல ஒரு கன்னியின் மூலம் பிறக்க தேவனால் முன்குறிக்கப்பட்டார். உலகத்திலே எத்தனையோ பெண்களுக்கு கிடைக்காத பாக்கியம் இந்த மரியாளுக்கு கிடைத்தது.

ஒரு சிறிய ஊசியினால் நாம் பெரிய பெரிய காரிங்களைச் செய்கிறோம். ஒரு சிறப்பனா ஆடையை தைக்கிறோம், மருந்துகளை அந்த சிறிய ஊசியினால் உடலில் செலுத்துகிறோம் அதைப்போல ஒரு சிறிய ஊரிலிருந்து உலக இரட்சகர் தோன்றினார். நீங்களும் சிறுவர்கள் தான் ஆனால் உலகத்தில் கர்த்தருடைய நாமத்தில் பெரிய காரியங்களைச் செய்யக்கூடியவர்கள். ஆமென்!

### மனப்பாடவசனம்

**"பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" – 1யோவான் 4:14**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 21 மே -2021 கனி - 6


ஆசிரியருரை

## நன்மைசெய்தவர்கள் மற்றும் தீமைசெய்தவர்கள்

## Those Who Have Done Good and Those Who Have Done Evil



உலகத்தில் இரண்டு விதமான கூட்டத்தாரை நாம் காண்கிறோம். ஒன்று நன்மைசெய்கிறவர்கள் மற்றொன்று தீமைசெய்கிறவர்கள். இவ்விருவருடைய நிலைமையைக்குறித்து வேதாகமத்தில் படிக்கின்றோம். **முதலாவது நன்மை செய்கிறவர்களைக்குறித்து தியானிக்கலாம்.** "நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா.5:29). இந்த உலகத்தில் வாழ்கின்ற காலத்தில் ஒவ்வொருவருக்கும் பலமணிநேரங்கள் கொடுக்கப்படுகிறது. இந்த நேரங்களை நல்லகாரியங்களுக்காகப் பயன்படுத்துகிறவர்களையும் தீமையான காரியங்களுக்குத் தங்களுடைய நேரத்தை பயன்படுத்துகிறவர்களையும் இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டு வாழ்க்கையை தூங்கிக் கழிக்கிறவர்களையும் பார்க்கிறோம். உலகத்தில் அநேக கல்லறைகளை நாம் காண்கிறோம். அவர்கள் தங்களுடைய இளைப்பாறுதலுக்குச் சென்று இளைப்பாறுகிறார்கள். இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் எழுப்பப்படுவார்கள். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பார்கள். நீங்கள் இந்த உலகத்தில் நன்மைசெய்வீர்களானால் அந்த பாக்கியத்திற்கு தகுதியானவராயிருப்பீர்கள்.

இயேசு சொல்கிறார்; "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" என்கிறார் (மத்.5:44). நம்மில் எத்தனைபேர் சத்துருக்களைச் சிநேகிக்கிறோம். சிலவேளைகளில் நம்மை சிநேகிக்கிறவர்களையே சத்துருக்களாக எண்ணுகிறோம் அல்லவா? இவற்றையெல்லாம் மாற்றிப்போட்டு நம்மை பகைக்கிறவர்களுக்காகவும், நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும் என இயேசுவானவர் நமக்கு போதிக்கிறார். இவைகளைின்படி நாம் நடக்கும்போது நன்மைசெய்கிறவர்களாயிருப்போம்.

நாம் கர்த்தர் நிமித்தமாக நன்மைசெய்யவேண்டும். "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும்

சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்" என்கிறார் (மாற்.8:35). உலகத்தில் வாழ்கின்ற யாவரும் ஒரு சாண் வயிற்றுக்காகவும் இந்த ஜீவன் காப்பாற்றப்படவும் வாழ்கின்றனர். அந்த ஜீவன் இரட்சிக்கப்படவேண்டுமானால் நாம் செய்யவேண்டியது என்ன? சுவிசேஷம் அதாவது இயேசுவின் பாடுகள் மரணம் இவைகளினிமித்தமாக ஜீவனை இழந்துபோவோமானால் நம்முடைய ஜீவனை தப்புவித்துக்கொள்ளுவோம். ஆயிரம்பொய்யைச் சொல்லியாவது நாம் வாழ்க்கையில் முன்னேறவேண்டுமென்று அநேகர் விரும்புகின்றனர். அப்படி முன்னேற்றமடைந்து என்னசெய்யப்போகிறோம் என்று அவர்கள் சிந்திப்பதில்லை. ஜீவன் தப்ப ஜீவனுள்ளவரின் வார்த்தைக்குச் செவிகொடுங்கள். "ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (யாக்.4:17). பாவம் செய்தால்தான் பாவம் என்று அநேகர் நினைக்கின்றனர். ஆனால் நன்மைசெய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போனால் அதுவும் பாவமாயிருக்கிறது. உலகத்திலே நமக்கு நன்மைசெய்யக்கூடிய நேரம் கிடைக்கிறது, நன்மைசெய்யக்கூடிய திராணியிருக்கிறது, அப்படியிருந்தும் நன்மைசெய்யாதிருப்போமாகில் பாவம் செய்கிறவர்களாயிருப்போம் என்பதை அறிவீர்களா? ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக்குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்.

ஒரு சிநேகிதனைக்குறித்து நாம் வேதத்தில் வாசிக்கிறோம். "உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்; சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக; என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்.11:5-8). ஆண்டவர் சொல்லும் இந்த சம்பவத்தில் அவன் வருந்திக்கேட்கிறதினிமித்தமாவது அவன் இரங்கிக் கொடுப்பான். அதைப்போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள். "நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" என பவுல் நமக்கு எடுத்துரைக்கிறார் (கலா.6:9). நன்மைசெய்து, நன்மைசெய்து என்ன கிடைக்கிறது? நமக்கு கெட்டபெயர்தான் வருகிறது என்று சொல்லி அநேகர் நன்மைசெய்வதை நிறுத்திக்கொள்ளுகின்றனர். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றையும் பாருங்கள் அவைகள் தாங்கள் உண்டாக்கப்பட்டபடி அதனதன் வேலையை சரியாய் செய்துகொண்டிருக்கிறது. அதைப்போல நாமும் நன்மைசெய்யும்படியாக கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்து நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்வோம். நன்மைசெய்கிறதினிமித்தமாக பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் நாம் செய்கிற நன்மைகளை இயேசுவின் நிமித்தமாகவும் அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் தொடர்ந்துசெய்து தேவனுடைய



(2தீமோ.1:5). இப்பேர்பட்ட பொறுப்பினை உடைய தாய்மார்களை தங்கள் பிள்ளைகள் எழும்பி பாக்கியவதிகள் என்று சொல்லுகிறபோது அது எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்!

வேதம் சொல்கிறது; "அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிகபிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது" (கலா.4:27). இந்த வேதப்பகுதியானது அன்றும் இன்றும் பொருத்தமுடையதாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் அநேக ஸ்திரீகள் தங்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை என்று சோர்ந்துபோகலாம். ஆனால் நம்மை உருவாக்கின தேவனோ, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற ஆபிரகாமின் தேவன். ஆபிரகாமுக்கு குழந்தைகள் ஒன்றும் இல்லாதிருக்கும்போது நம்மெல்லொருக்கும் தகப்பனாக்கினார். அன்பு சகோதரியே, நீ ஆபிரகாமின் விசுவாச குமாரத்தி. அதை ஒருபோதும் மறந்துபோகாதே, உன் சிருஷ்டிகர் வல்லவர். கர்த்தர் உன் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்கிறவர். "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை..." (லூக்.1:37). இதை வாசிக்கிற நீங்களும்கூட சிறுமைப்பட்டவளைப்போல பெருங்காற்றில் அடிபட்டவளைப்போல, தேற்றரவற்றவளைப் போல இருக்கலாம். ஆனால் "அவர் (கர்த்தர்) சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்...." (1சாமு.2:8). "என் தேவன் நம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்று எண்ணி மகிழ்ந்து களிகூருங்கள்.

இளம் பிராயத்தில் விவாகம் செய்து தள்ளப்பட்டவளைப் போலிருக்கிற அன்பு தங்கையே 'மகிழ்ந்து களிகூரு' "பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்; உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்" என எருசலேமைப்பார்த்து ஏசாயாவைக் கொண்டு கர்த்தர் உரைத்தார் (ஏசா.54:4-6). அதைப்போல நம்மை சிருஷ்டித்த நம்நாயகராகிய கர்த்தர் நம்மைத் தள்ளிவிடமாட்டார். ஏனெனில் இயேசுவும் இப்பூமிக்கு மாம்சத்தில் வந்தபோது எல்லாராலும் தள்ளப்பட்டார். அற்பமாய் எண்ணப்பட்டார். ஆனால் "...அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" (அப்.4:11). நாம் மனுஷரால் தள்ளப்பட்டவர்களாயிருந்தாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேரக்கடவோம் (1பேது.2:4). எனவே 'மகிழ்ந்து களிகூரு! **-தொடரும்**

# மகிழ்ந்து களிகூரு - Be Glad and Rejoice

பெண்கள் பகுதி

*-Glory Arjunan*



**அ**ன்பான சகோதரிகளே, இத்தலைப்பினை இன்னொரு முறைகூட வாசித்துப்பாருங்கள். அப்பொழுது நம் இருதயம் மகிழ்ந்து களிகூரும். ஏன் தெரியுமா? நம்மை உருவாக்கின தேவன் பெண்களாக நம்மை அற்புதவிதமாக சிருஷ்டித்து அநேக பொறுப்புகளையும் கொடுத்துள்ளார். எனவே இப்பூமியில் நம்முடைய பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது. எப்படியென்று கேட்கிறீர்களா? வாருங்கள், பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் நம்முடைய பங்கினை அறிந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்துவோம், மகிழ்ந்து களிகூருவோம்!

தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் சிருஷ்டித்து ஆறாம் நாளில் தம்முடைய சாயலாகவே மனுஷனை சிருஷ்டித்தார். அந்த முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்த தேவன் தாம் படைத்துள்ள இந்த சிருஷ்டிப்புகளுடன் நீ உறவாடி மகிழ்ந்திரு, இவைகள் எல்லாம் உனக்குத்துணையாக இருக்கும் என்று சொல்லவில்லை மாறாக, "...தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). அந்தப்படியே "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" (ஆதி.2:22). பார்த்தீர்களா, நாம் எவ்வளவு அற்புதமான பாத்திரமாக வடிவமைக்கப்பட்டுள்ளோம்! ஒவ்வொரு ஸ்திரீயும் தன் புருஷனுக்கு ஏற்ற துணையாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள் என அறியும்போது நமது பங்கு அதி முக்கியமானதல்லவா? ஆம், ஒவ்வொரு ஆண் மகனின் வளர்ச்சிக்கும் அல்லது மேன்மைக்கும் பின்னே ஓர் பெண்மணி இருக்கிறாள் என்பர். நீதிமொழிகள் 31 ம் அதிகாரத்திலுள்ள அநேக வசனங்கள் இதனை உறுதிசெய்கின்றன. கர்த்தர் ஸ்திரீகளாகிய நம்மை நம் புருஷனுக்குக் கிரீடமாகவும் ஏற்ற துணையாகவும் உண்டாக்கியிருக்கும்போது நம் கர்த்தருக்கு நன்றி சொல்லி மகிழ்வோம்.

மேலும், தாய்மாராகிய ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் பிள்ளைகளைக் கர்த்தருக்குள் வளர்க்கும் பொறுப்பு என்பது இவ்வுலகில் காணப்படும் அநேக பதவிகளுக்கான பொறுப்பினைக்காட்டிலும் பெரியது. "இன்றைய குழந்தை நாளைய தலைவன் என்பர்". வேதாகம பெண்களில் அநேகர் தங்களுடைய பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், படுத்திருக்கும்போதும், கர்த்தருடைய மகத்துவங்களைக்கூறி வளர்த்து பிற்காலங்களில் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை காப்பாற்றும் தலைவனாகவும், பஞ்சகாலத்திற்கு தப்புவிக்கும் தலைவனாகவும், கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கும் தீர்க்கதரிசிகளாகவும், போதகர்களாகவும், மீட்பின் செய்தியை கூறும் பிரசங்கியார்களாகவும் மாற காரணமாகயிருந்திருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும், உத்தம தீமோத்தேயுவை உருவாக்கும் பொறுப்புடையவர்களாக இருந்திருக்கின்றனர்



திருசித்தத்திற்கு நம்மை அர்ப்பணிப்போம். உங்களுடைய நன்மை எக்காரணத்தைக்கொண்டும் தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். நாம் ஏற்றகாலத்தில் அறுப்போம் என்ற நம்பிக்கையோடு நன்மைசெய்யுங்கள்.

**இரண்டாவது, தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என வாசிக்கிறோம்.** ஆம், நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி போவார்கள். தீமைசெய்தவர்கள் ஆக்கினை அடையும்படி போவார்கள். வேதம் சொல்லுகிறது; "நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது" (நீதி.17:13). சிலருக்கு தீமைசெய்யாவிடில் தூக்கம் வராது. அவர்கள் கவனிக்கவேண்டும். உங்களுடைய வீட்டைவிட்டுத் தீமை நீங்காது. மேலும் "தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்" (நீதி.24:9). தீமை செய்தால்தான் பாவம் என்று அல்ல, தீயநோக்கம் கூட பாவமாக இருக்கிறது. அது பாவம் செய்வதற்கு போடப்படும் அஸ்திபாரமாக இருக்கிறது. ஆகையால் தீமையான எண்ணத்தையும் நோக்கத்தையும் சிந்தனையையும் உங்களைவிட்டு அகற்றிப்போடுங்கள். கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள். "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாக கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதை 2தீமோ.4:14-ல் வாசிக்கிறோம். பவுல் பதிலுக்கு பதிற்செய்யவில்லை கர்த்தர் அவன் செய்கைக்குப் பதிலளிப்பாராக என்றார். இன்றைக்கு நாம் பழிக்கு பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடமளிக்கவேண்டும். தீமைசெய்தவர்களுக்கு நாம் நன்மைசெய்யபோதிக்கப்படுகிறோம்.

தன் சகோதரர்களுக்கு நன்மைசெய்த யோசேப்பை குறித்து படிக்கிறோம்; "நீங்கள் எனக்கு தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான் (ஆதி.50:20). யோசேப்பு இங்கே அவனுடைய சகோதரர்களை பழிவாங்கும் எண்ணத்தோடு அவர்களை பழிவாங்கியிருப்பானேயானால் அவர்களைச் சிறைச்சாலையில் போட்டு மரணபரியந்தமும் அவர்களைத் துன்பப்படுத்தியிருப்பான். அவனுக்கு எகிப்திலே முழுஅதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் அந்தவிதமாக செய்யவில்லை. தனக்கு தீமைசெய்யும்படி எண்ணங்கொண்டிருந்த தன்னுடைய சகோதரர்களை மன்னித்து தேவன் அதை எனக்கு நன்மையாக முடியப்பண்ணினார் என்று எடுத்துக்கொண்டான். தேவன் நமக்கு எதைச் செய்தாலும் அதை நம்முடைய நன்மைக்காவே என்று எண்ணுவோமானால் நாம் தேவனுடைய சித்தங்களை புரிந்துகொள்ளமுடியும். அநேக நன்மைகளை இப்பூமியில் பெற்று வாழுவோம். தீமைசெய்யும்படியாக நாம் எத்தனிப்போமானால் அதன்பின் வரும்விபரீதங்களை நாம் சந்திக்கவேண்டியவர்களாவோம்.

மொர்தெகாய் என்ற மனிதனைக்குறித்து நாம் பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் படிக்கிறோம். "ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல்மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது; மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்" (எஸ்த.3:5,6). ஒருவனை பழிவாங்க நினைத்தவன் அவனுடைய ஜனங்களின்

மீது கைபோடும்படி வகைதேடினான். இதை அறிந்த மொர்தெகாய் எஸ்தருக்கு தகவல் கொடுத்தான் யாவரும் உபவாசித்து இதற்காக ஜெபித்தார்கள். எஸ்தர் துணிந்து ராஜாவுக்கு இதை தெரிவித்தாள். நடந்தது என்ன? "அப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப்போட்டார்கள்; அப்பொழுது ராஜாவின் உக்கிரம் தணிந்தது" (எஸ்த.7:10). படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் என்று சொல்லப்பட்டபடியாக மொர்தெகாய்க்கு அவன் ஆயத்தம்பண்ணின தூக்கு மரத்திலே அவனையே தூக்கிப்போட்டார்கள். தீமைசெய்ய நினைக்கும்போதும், தீமைசெய்ய தூண்டும்போதும் தீமை நம்மைவிட்டு போகாது அது நமக்கே அழிவை ஏற்படுத்தும். அந்தப்படியாக ஆமானுக்கு சம்பவித்தது.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகர்களாகிய உங்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால்; நீங்கள் நன்மைசெய்ய நாடுகிறீர்களா? அல்லது தீமைசெய்ய நாடிக்கொண்டிருக்கிறீர்களா? நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடைவார்கள் என திருமறை நமக்குப்போதிக்கிறது. பின்பு நடக்கப்போவதை யார் பார்த்தது என்று சொல்லாதிருங்கள். வேதாகமம் அதற்கான விடையை நமக்குக் கொடுக்கிறது. தீமைசெய்தவர்கள் தேவனுடைய பார்வையில் தப்பமுடியாது அவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள கோபாக்கினையின் பாத்திரத்தில் பங்கடைவார்கள். நீங்கள் எதைத் தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள். தேவன் நம்மை நித்திய நித்தியமான ஆசீர்வாதத்திற்கு அழைத்திருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல. நாம் நன்மை செய்வதால் அவருக்கு ஒரு ஆதாயமும் இல்லை நாம் தீமை செய்வதால் அவருக்கு ஒரு நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. இந்த இரண்டில் ஒன்றில் நன்மையடையப்போவதும் தீமையடையப்போவதும் நாமே. நம்முடைய நன்மைக்காகவே தேவன் இவைகளை சொல்லுகிறார். சிந்தித்து நல்ல தீர்மானத்தோடு முடிவெடுங்கள்.

**நியாயத்தீர்ப்புக்கு பின்பு வலது இடது புறத்தில் நிற்பவர்களின் நிலைமை என்ன?**

"சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள் மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்"... அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் " (மத்.25: 32,33;46). வலது புறத்தில் நிற்பவர்கள் செம்மறியாட்டுக்கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் மேய்ப்பனின் சொற்படி தலையை கீழே போட்டுக்கொண்டு அவன் பின்னே சென்றவர்கள். இடது பக்கத்தில் நிற்பவர்கள் வெள்ளாட்டுக்கூட்டமாக இருக்கிறார்கள் மேய்ப்பர்களுடைய வார்த்தைக்குச் செவி கொடாதவர்கள். மேலும் கீழும் பார்த்துக்கொண்டு செல்லக்கூடியவர்கள். இவர்களுக்கு நித்திய ஆக்கினை வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் நித்திய நித்தியமான வேதனையுள்ள இடம் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். நீதிமான்களோ சூரியனைப்போல பிரகாசமாயிருப்பார்கள். இவர்களைப்போல நீங்கள் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## வேத அறிவுப்போட்டி 246-ன் விடைகள்

1. யோசியா - 2நாளா.35:18
2. பேதுரு - 2பேது.3:16
3. எஸ்றா - எஸ்றா 10:12
4. யோவான் - 1யோவா.2:20
5. நெகேமியா - நெகே.13:25
6. ஒழிந்துபோயின - வெளி.21:4
7. பூரீம் - எஸ்தர் 9:28
8. இயேசு - மத்.22:29
9. யோபு - யோபு 21:34
10. ஆம் - மாற்.7:26

### சரியான பதில் எழுதியவர்கள்

1. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
2. J. ஆலிவ் - கோவை
3. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - பெருமாள்புரம்
4. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
5. J.S. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
6. D. அன்புக்கமலம் - காரைக்குடி
7. B. ஞானதீபம் ஜெபராஜ் - இடையன்குடி
8. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
9. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
10. J. செல்வராஜ் - தூத்துக்குடி
11. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - மருதகுளம்
12. Miss. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
13. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
14. Sis.R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
15. M. ராமசந்திரன் - ஒட்டநத்தம்
16. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
17. S. சாந்தகுமாரி - நாசரேத்
18. S. சந்திரகாந்தா - நெல்லூர்
19. Mrs. ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
20. Mrs. ஞானம்பிலிப் - கோவை
21. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
22. J. விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
23. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
24. Mrs. ராஜம்மாள் மனோகரன் - சென்னை
25. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
26. Mrs. பியூலாஜேசுரத்தினம் - பாண்டிச்சேரி
27. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
28. C. அருள்ராஜ் - சென்னை
29. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
30. Mrs. நிர்மலாஎழில் - சேலம்
31. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
32. Mrs. லதாஎலிசபெத் - பாண்டிச்சேரி
33. E. அதிசயம் - பனைகுடி
34. Mrs. கிரேஸ்டெல்லாபக்தர் - சென்னை
35. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
36. D. விஜயாகாந்தி - வெல்லூர்
37. P. முருகன் - தூத்துக்குடி
38. V.C. ரூபவல்யா - தூத்துக்குடி
39. R. எமிமாள் - ஆனந்தபுரம்
40. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
41. A. ஆலிஸ்குணசீலி - நாசரேத்
42. D. தேவபுஸ்பம் - நாசரேத்
43. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
44. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
45. Mrs. ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
46. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
47. Mrs. சாந்தபழநி - தருமபுரி
48. S. செல்வராஜ்சாலமோன் - திருநெல்வேலி
49. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் - மதுரை
50. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
51. J. மேரிஜெயக்குமார் - மதுரை
52. Mrs. நவரத்தினம்ஞானராஜ் - நாசரேத்

## வேத அறிவுப்போட்டி 247-ன் விடைகள்

1. மதிகேடன் - சங்.53:1
2. ஸ்காரியோத்தல்லாத யூதா - யோவா.14:22
3. நிறைகல்லும், மரக்காலும் - நீதி.20:10
4. யூதாஸ் - லூக்.22:20
5. ஞானியும் - பிர.2:16
6. சவுலும் - அப்.8:1
7. ஏசாயா - ஏசா.27:6
8. சபியாதிருங்கள் - ரோம.12:14
9. எரேமியா - எரே.38:6
10. புசிக்கலாம் - 1கொரி.10:25

### சரியான பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
2. D. அன்புக்கமலம் - காரைக்குடி
3. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
4. Mrs. ரூபிஜெயசீலி - கலுங்குவிளை
5. T. ராஜாத்தி - கோம்பை
6. J. ஆலிவ் - கோவை
7. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
8. Mrs. ஞானம்பிலிப் - மதுரை
9. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
10. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
11. Tmt. மரகதம்திரவியம் - கோம்பை
12. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
13. Mrs. பியூலாஜேசுரத்தினம் - புதுச்சேரி
14. S. சந்திரகாந்தா - நெல்லூர்
15. D. சாந்தாதேவி - பன்னைப்புரம்
16. Mrs. ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
17. P. முருகன் - தூத்துக்குடி
18. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
19. J. செல்வராஜ் - தூத்துக்குடி
20. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
21. E. அதிசயம் - பனைகுடி
22. C. அருள்ராஜ் - சென்னை
23. Mrs. சாந்தபழநி - தருமபுரி
24. D. விஜயகாந்தி - கூமாபட்டி
25. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
26. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
27. S. சாந்தகுமாரி - நாசரேத்
28. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
29. Mrs. பாலின்மார்ட்டின் - சிவகங்கை
30. S. மேரிஜெயக்குமார் - மதுரை
31. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
32. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
33. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
34. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் - மதுரை
35. J. பிச்சை - விருதுநகர்
36. P. ஸ்டெல்லாமேரி - திருப்பூர்
37. Mrs. ராஜம்மாள் மனோகரன் - சென்னை
38. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் - திருநெல்வேலி
39. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
40. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
41. R. பாரதிரஜேந்திரன் - கோபி
42. T. ஏஞ்சலின்நேசமலர் - சாந்தாபுரம்
43. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
44. R. ஹரிராகவன் - வேப்பம்பட்டு
45. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
46. B. ராகோத்தமன் - சென்னை
47. S. சாலமோன்செல்வராஜ் - திருநெல்வேலி
48. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி

**உம்முடைய வேதம் சத்தியம்**
**சங்கீதம் 119:142**

53. Mrs. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
54. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் - மேற்குதாம்பரம்
55. T. ராஜாத்தி - கோம்பை
56. Mrs. ருக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
57. M. முருகன் - பிலிக்கல்பாளையம்

## கர்த்தருக்குள் மரித்தார்



சகோதரர் S.சுகுமார் அவர்கள் சீத்தஞ்சேரி பகுதியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்து கொண்டுவந்தார். சில நாட்களாக கொரோனா தொற்றினால் அவதிப்பட்டுவந்தவர் 25.04.2021 ஞாயிற்று கிழமை இரவு கர்த்தருக்குள் மரித்தார். அவருடைய குடும்த்திற்காகவும் அவருடைய பணியை தொடர்ந்து செய்யவிருக்கும் அவருடைய மகன் இளவரசன் ரீகனுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**29.05.1956 - 25.04.2021**

தொடர்புக்கு
சகோ.இளவரசன் ரீகன், சபை போதகர்
கிறிஸ்துவின் சபை
சீத்தஞ்சேரி
திருவள்ளூர்மாவட்டம்
சென்னை
மெபைல்: 80727 60071

**"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்" - வெளிப்படுத்தல் 14:13**

# நான் யார்?



- நான் எட்டாம் நாளில்...
- இஸ்ரவேல் வம்சத்தான்
- பென்யமீன் கோத்திரத்தான்
- எபிரெயன்
- நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்
- பக்திவைராக்கியத்தின்படி...
- நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்

**ஜெபியுங்கள்**



- நாம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்த தேவனுக்கு நன்றிசொல்லி...
- சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட...
- இந்திய விவசாயம் காக்கப்பட...
- கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்காக...
- சுவிசேஷத்திற்கு உதவியாயிருக்கிற சபைகளுக்காக...
- வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- சபைகள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...



## இரட்சிக்கப்பட ஏன் சிறந்த நீதியுள்ள வாழ்க்கை மட்டும் போதாதது

Why Good Moral Living Alone Is Not Enough To Save -*J.C.Choate*



நீங்கள் இதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அதிகமான ஜனங்கள் இரட்சிக்கப்பட தங்களுடைய சுய நற்கிரியையின் அடிப்படையில் முயற்சிக்கின்றபடியினால் அநேகமாக இழந்து போனவர்களாய் இருப்பார்கள். நித்திய ஜீவனை தேடி இயேசுவினிடம் வந்த ஒரு வாலிபனுடைய சம்பவம் இதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் வாசிக்கலாம் “அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்குநான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு; நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்.19:16-22).

முந்தைய கால சம்பவம் பழைய ஏற்பாட்டு சட்டத்தின் அடிப்படையில் நடந்தவையாகும். வேறொரு வகையில் அச்சமயச் சட்டம் தொடர்ந்து கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது ஆனபடியால் இயேசு அந்த பழைய சட்டம் கூறுகிறபடி இந்த மனிதனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினால் அவன் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென பத்துக்கற்பனைகளை அறிந்தவனாக இயேசுவின் விளக்கத்தை கேள்விப்படுகையில் அவன் தன்னுடைய சிறுவயது முதலே அவைகளைக் கைக்கொண்டு வருவதாக பதிலளித்தான். நாம் இதைக் குறித்து சிந்திக்கையில் அந்த கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டுவருவதினால் அவன் ஒரு சிறந்த நீதியுள்ள மனிதன் அல்லது வேறுவகையில் சிந்திப்போமானால் எந்த வழியிலும் அவன் ஒரு துன்மார்க்கன் அல்லது ஒரு கெட்ட மனிதனல்ல என

அறிந்துகொள்ளலாம். இதுவே அவன் பரலோகத்திற்குச் செல்ல போதுமானது என நினைத்தான், எனவே கர்த்தருடைய அனுமதியை மட்டும் பெற்றுக்கொள்ள விரும்பினான் ஆனால் இச்சம்பவத்தில் இது போதுமானதல்ல இயேசுவோ அவனுடைய உள்ளிந்திரியங்களையும், அவனுடைய ஜீவியத்தையும் கண்டுகொண்டவராக அங்கே ஒரு தடையிருப்பதையும் காண்கிறார். இது அவன் ஒரு பணக்காரன் என்பதைக் காட்டுகிறது. எனவே அவன் தன்னுடைய நம்பிக்கையை தன்னுடைய ஐசுவரியத்தின் மேல் வைத்துக்கொண்டிருந்தான். ஆனபடியினால் இயேசு அவனுக்குள்ள எல்லாவற்றையும் விற்று, தரித்திரருக்குக் கொடுக்க வேண்டுமென அவனிடம் சொன்னார். அதன்பின் நாம் ஒரு துக்ககரமான கூற்றினைப் பெறுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது. அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் அதைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய் போய்விட்டான். ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரைப்பற்றிய சம்பவத்தில் ஒரு சிறந்த மாதிரியை நாம் பெற்றுள்ளோம். கொர்நேலியு என்பவன் ஒரு புறஜாதியான் அவன் பட்டாளத்திலே ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்த ஒரு மனிதன்; அதாவது அவன் நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். வேதமும் அவனைப் பற்றி இவ்வாறாகக்கூறுகிறது: அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்'' (அப்.10:2)., இருந்த போதிலும் அவன் ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். கர்த்தருடைய இடைபடுதல் மூலம் கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரனைவரும் மற்றும் பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் அங்கே கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அந்தத் திருப்புமுனையில் பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்தான் மேலும் வேதவாக்கியம் சுவிசேஷம் யூதர்களுக்கு அருளப்பட்டதுபோல புறஜாதியாருக்கும் அருளப்பட்டுள்ளது என்பதை யூதர்கள் நம்பத்தக்கதாக இவர்கள் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது என்று கூறுகிறது. ''அப்பொழுது பேதுரு நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்'' (அப்.10:47,48). இப்போது கொர்நேலியு வாழ்ந்து வந்த விதத்தைக் குறித்து குறிப்பெடுப்பீர்களென்றால் இன்றும் கூட எந்த மனிதனும் அவன் ஒரு தேவபக்தியுள்ள மனிதன், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன், ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன், பார்வைக்கு இனிமையான நல்ல மனிதன் என பலவாறு வகைப்படுத்தப்பட்டிருப்பான் என்பதை நீங்கள் காணலாம்.



✦ இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவர் அல்ல என நான் கருதுகின்றேன். அவர் எவ்வித பழக்கவழக்கங்களை கொண்டிருப்பார் அல்லது எவற்றில் முன்னேறுவார்? என்னுடைய குடும்பத்திற்குச் சமாதானத்தைக் கொண்டுவருவாரா? அல்லது சண்டையை கொண்டுவருவாரா? அவர் மது அருந்துவாரா, பொய் சொல்லுவாரா, ஏமாற்றுவாரா, ஒழுக்கமில்லாமல் வாழ்வாரா, என்னை அல்லது என் பிள்ளைகளை தகாத முறையில் நடத்துவாரா? ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் தன் வாழ்வின் மையமாயிருப்பாரானால் , அவரே அந்த முதலாவது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொள்ள வேண்டும் அதன் பிறகு என்னுடைய புருஷன் அவருக்கு எதிலும் இடம் கொடுக்கவில்லையென்றால், இது எப்பேர்பட்ட மனவேறுபாடுகளையும் வேதனையையும் உருவாக்கும்?

✦ இந்த பெண் என்னுடைய பிள்ளைகளுக்கு தாயாகயிருப்பாள். என்னைக்காட்டிலும் அவள் நாள் முழுவதும் அதிகமான நேரம் அவர்களுடனிருப்பாள் அவளோ கிறிஸ்தவளாக இல்லாதபோது அவள் ஆவிக்குரிய காரியங்களை பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க முடியும்?

✦ நான் என்னுடைய மனைவியின் மேல் கொண்டுள்ள அன்பில் வளர விரும்புகிறேன். அவள் ஒரு கிறிஸ்தவளாக இல்லாவிட்டால், மேலும் நான் அவளைக் கிறிஸ்துவுக்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை என்றால், நித்திய ஜீவனுக்கேதுவான நம்பிக்கையில்லாத அவளுடைய வாழ்வையும் மரணத்தையும் பார்ப்பது மிகவும் வேதனை நிறைந்த காரியமாக இருக்கும்.

✦ பத்தில் எட்டு நபர் கிறிஸ்தவரல்லாதவரை திருமணம் செய்து கடைசியில் தேவனையும், சபையையும் விட்டு விலகிப் போகின்றனர் என புள்ளி விவரம் கூறுகிறது. உதாரணமாக நான் கடந்து செல்ல திட்டமிட்டிருக்கும் நிலப்பகுதி கண்ணிவெடி வைக்கப்பட்டிருக்கிறது, அப்பொழுது அதைக் கடக்க முயற்சிசெய்கிறவர்கள் வெடித்து சிதறியிருக்கிறார்கள் என்பதை நான் அறிந்தால், நான் அதற்கப்பாலேயே நின்றுவிட மிகுந்த ஞானமுள்ளவளாய் இருப்பேன். கிறிஸ்தவரல்லாத துணையை தெரிவுசெய்கிற அநேகர் சோர்வடைந்து தேவனை விட்டு விழுந்து போயிருக்கிறார்கள் என்பதை நான் அறியும் போது, அதே தவறை நான் தெரிவு செய்ய மாட்டேன்.

நாம் 2கொரிந்தியர்6:14-18-ல் இந்த எச்சரிப்பை வாசிக்கிறோம்: ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்

பெண்கள் பகுதி

## மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போது மதம் முக்கியமல்ல

**Religion Is Not Important When Choosing A Wife** *-Betty*



இந்தியாவில் காலங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன, பழக்க வழக்கங்கள் வெகுவாக மாறிக் கொண்டிருக்கின்றன, விசேஷமாக நகரங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. இளைஞர்கள் ஒரு கணவனை அல்லது மனைவியைத் தெரிந்தெடுப்பதில் தங்களுடைய சுய விருப்பத்தை நிறைவேற்றவே விரும்புகின்றனர். பலமுறை, தங்களுடைய பூரண வளர்ச்சியடையா பருவத்தில், அவர்கள் அழகை, அல்லது வசீகரத்தை அல்லது செல்வத்தை, தாங்கள் உள்ளத்தில் நினைக்கின்றவற்றை வாழ்க்கைத் துணையில் எதிர்பார்க்கின்றனர். ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணங்களில் கூட, பெற்றோரால் கருதப்பட்ட மிக முக்கியமான குணாதிசயங்கள் பட்டியலின் தலைப்பில் எப்போதும் இடம் பெறுவதில்லை.

ஒரு இளைஞன் தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் போது எவ்விதமான குணாதிசயங்களை எதிர்பார்க்க வேண்டும், அல்லது பெற்றோர்கள் எவ்விதமான குணாதிசயங்களை தங்களுடைய மனதில் கொள்ள வேண்டும்? குறிப்பாக, கிறிஸ்தவர்கள் மத்தியிலும், கர்த்தருடைய சபை அங்கத்தினார்கள் மத்தியிலும் எது மிக முக்கியமானதாக இருக்கிறது?

ஒரு பூரண வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்கு, அல்லது தேவனுடைய ஞானத்திற்கேற்ப யோசித்துக்கொண்டிருக்கின்ற கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு, உள்ளான வாழக்கைத்துணை ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவனாக இருக்கவேண்டுமென்ற எண்ணமே முதலும் எல்லாவற்றிற்கும் மேலானாதுமான எண்ணமாக இருக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாயிருந்த போது, அன்பு கிறிஸ்தவ பெற்றோர்களால் ஏதோ ஓரிடத்தில் வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்து, ஒரு நாள் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நம்முடைய பிள்ளைகளாகிய சிறு பிள்ளைக்காகவும், பையனுக்காகவும் நாம் அதிகம் ஜெபித்தோம். இது அவர்கள் கிறிஸ்தவர்களைத் திருமணம் செய்வார்கள் கிறிஸ்தவர்களைத்தான் செய்யவேண்டும் என்பது முன்னமே தீர்மானம் செய்யப்பட்ட ஒன்றாக இருந்தது.

சிலர் “ஏன்? ஒருவர் எந்த சபை அங்கத்தினர் அல்லது எந்த சமயத்தைப் பின்பற்றுகிறவர் என்பது பற்றியகாரியம் என்னவிதத்தில் மிக முக்கியமான ஒன்று? என வினா எழுப்புவர்”

இதன் பதிலாக, புருஷனை அல்லது மனைவியை தெரிந்து கொள்ளுவது சம்பந்தமான பின்வரும் இக்கேள்விகளைப் பற்றி ஆழ்ந்த யோசனை செய்யுங்கள்:

✦ இந்த மனிதன் என்னுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவராக இருப்பார். அவர் ஒரு பலமிக்க கிறிஸ்தவராக இல்லாவிட்டால், நான் நித்திய இரட்சிப்பை பெறும்படிக்கு என் வாழ்நாள் முழுவதும் விசுவாசமிக்க வாழ்வு வாழ அவர் எவ்வாறு எனக்கு உதவ முடியும்?



இருந்தபோதிலும் கொர்நேலியு ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். ஆனபடியினால் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதும் அதை விசுவாசிப்பதும் அவன் இரட்சிக்கப்படும்படிக்கு அதற்குக் கீழ்ப்படிவதும் அதன்பின் அவன் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும் அவனுக்கு அவசியமாயிருந்தது. இதையெல்லாம் செய்வதற்கு அவன் மறுத்தவனாயிருந்தானா? அவன் செய்த எல்லா நற்கிரியைகளைச் செய்து கொண்டிருந்த போதிலும் அவன் இழந்து போன நிலைமையிலேயே தொடர்ந்திருந்திருப்பான்.

ஒருவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு வாழ வேண்டுமென்பது உண்மைதான். அதன் பொருள் ஒருவன் வெறுமனே கெட்ட மற்றும் தவறான செயல்கள் புரிவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் மாம்சத்தின் கிரியைகளை அல்லது உலகப் பிரகாரமான கிரியைகளைச் செய்யக்கூடாது. கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல், “அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறிவீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.” (1கொரி.6:9,10) என்று எழுதினார். அவர்களுடைய உலகப்பிரகாரமான ஐக்கியத்தைக் குறித்து கொரிந்துவிலுள்ள சகோதரருக்குச் சொல்லுகையில் பவுல் “விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன் ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர் பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால் சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக் காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக்கூடாது, அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது” (1கொரி.5:9-11) என்று சொன்னார். இங்கே பவுல் உலகத்தாரோடே எவ்வளவும் பேசி கலந்திராமல் இவ்வாழ்வினை நடத்திச் செல்வது கூடாதகாரியம் என்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஒரு அவிசுவாசமான சகோதரனுக்குள்ளும் ஒரு துன்மார்க்கமான வாழ்வு வாழ்கின்றவனுக்குள்ளும் இக்காரியங்கள் வரும்பொழுது, அப்பேர்பட்ட நபருடன் நாம் ஐக்கியங்கொள்ளக்கூடாது.

பவுல் தொடர்ந்து கலாத்திய சகோதரர்களுக்கு “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,

பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (கலா.5:19-21) என்கிறார். பவுல் பல்வேறு வேத பகுதிகளில் இவ்வகையான பாவச்செயல்களுக்கு ஒருவன் இஷ்டப்படி இடமளித்து தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாதென கூறுகின்றார். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்தவர்களல்லாதவரோ ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களில் ஈடுபட்டுக்கொண்டும் தேவனையும் பிரியப்படுத்த இயலாது. ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களைச் செய்கிறதில்லை என்ற அடிப்படையில் மட்டும் இரட்சிக்கப்பட முடியாத வேளையில் ஒருவன் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பதற்கு அவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார் (1தெச5:22).

கிறிஸ்தவர்கள் மற்ற சமயத்தினரை விட அதிகமான நீதிக்குரிய சுதந்திரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சிலமனிதர்கள் தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகைபிடிக்கலாம், மதுபானம் அருந்தலாம், ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடலாம், கெட்டவார்த்தை பேசலாம், ஆபாச உடை அணியலாம் இது போன்ற இன்னும் பலவற்றைச் செய்யலாம் என நினைக்கின்றார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது, கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய அர்த்தம் என்ன என்பதை அறிந்தவர்கள் நிச்சயமாக இவ்வாறெல்லாம் செய்யக்கூடாது என அறிவார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகின்ற சிலர் இவ்வாறான செயல்களிலும் தவறான பழக்க வழக்கங்களிலும் ஈடுபடுவது உண்டு என்பது உண்மை, ஆனால் அவ்வாறு செய்வதினால் அவர்கள் தேவனை துக்கப்படுத்திவருகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படவும் ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கவும், தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டிருந்தால் மட்டும் போதாது அவன் தன்னுடைய சகல பாவங்களுக்காகவும் கண்டிப்பாக மனந்திரும்பி அல்லது அவைகளை விட்டு விலகி அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொண்டு அல்லது அறிக்கையிட்டு கடைசியாக தன்னுடைய பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை ஒருவன் செய்யும்போது மட்டுமே கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ள மனதுள்ளவராய் இருப்பார். கிறிஸ்தவனாகிய ஒருவன் ஜீவகிரீடத்தை பெறுகிறவனாயிருப்பதால் அவன் மரணம்பரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் அதிகமதிகமாய் மறுபடியும் வேதவாக்கியங்களில் வாசிக்கிறோம் (மாற்.16:15,16; அப்.2:38; மத்.10:32; அப்.2:47; வெளி.2:10)

இப்போது ஒருவன் தன்னுடைய சிறந்த ஜீவியத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என ஒரு சிறந்த நீதியுள்ள மனிதனாகவும் விசுவாசமிக்கவனாகவும் இருக்கலாம், ஆனால் துன்மார்க்கத்தோடே



காட்டுகிறார். அவர் ஒரு முன் மாதிரியின் வல்லமையை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒரு முன் மாதிரியைப் பின்பற்றும் விதத்தில் அம்மாதிரியைப் போன்று நடந்துகொள்ளும் விதத்தில் மிக உயர்ந்தவராக இருந்து மனுஷர் தலைவர்களைப் பின்பற்றுவதற்கு மிகச் சிறந்த காரணமாக இருக்கிறார்.

**கேள்விகள்**

1. மனுஷர் தமக்கு கீழ்ப்படியும்படி கிறிஸ்து கட்டாயப்படுத்துகிறாரா? ---------

2. மத்.10:28 சொல்கிறது -------------------- அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்று.

3. 1யோவான் 4:18 சொல்கிறது -------- அன்பு ------------ புறம்பே தள்ளும் என்று.

4. பணத்தை 1பேதுரு 5:2 ----------- என்று அழைக்கிறது.

5. ------------- ---------------- வேராயிருக்கிறது என்று 1தீமோ.6:10 கூறுகிறது.

6. ஒரு தலைவரைப் போல் இருக்க முயற்சி செய்வது என்பது எந்த வார்த்தையை குறிப்பிடுகிறது?

7. அப்.1:2 உரைக்கிறது இயேசுவானவர் --------------- --------------- தொடங்கினார் என்று.

8, உலகின் மாபெரும் தலைவராயிருக்கிறவர் யார்?

9. சபை தலைமைக்கு புறம்பே உத்தமமான வேலை கனத்துக்குரியதாயிருக்கிறதா?

10. தலைவர்களை பின்பற்றுவதில் மிக உயர்வான காரணம் என்ன?--------

### கொரோனா கால சிந்தனை

''காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனையைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்'' நீதிமொழிகள் 12:13,14

**நடப்புச் செய்திகள்**

- ❒ 18 வயது நிரம்பிய இந்தியகுடிமகன் எந்த ஒரு மதத்தையும் பின்பற்றலாம்... மதத்தையும் பரப்பலாம் (09.04.2021) உச்ச நீதிமன்றம் தீர்ப்பு.
- ❒ 14.84 கோடியை தாண்டியது உலக கொரோனா பாதிப்பு.
- ❒ கொரோனாவுக்கு எதிராக இந்தியா நடத்திவரும் யுத்தத்தில் அமெரிக்கா துணை நிற்கும் - ஜோ பைடன்.

**தெரிந்து கொள்ளுவோம்** *- K.R.K.Ravi Asir*

### பசிபிக் சமுத்திரம்

**பசிபிக் என்ற சொல்லுக்கு 'அமைதியான' என்று பொருள். பசிபிக் கடல், அலையின்றி அமைதியாக இருந்ததால் மாலுமிகள் இப்பெயர் இட்டு அழைத்தனர்**

கனத்துக்குரியதாய் இருக்கிறது. வேலைக்காக சம்பளம் கொடுக்கப்படுவதிலே எந்த தவறும் இல்லை. ஆனால் மார்க்கத்திலே தலைவர்களை பின்பற்றுவது இதற்கான காரணம் இல்லை. உண்மையற்றவகையில் பின்பற்றுகிற சிலர் சில இலவச வேதாகமங்கள் அல்லது வேறு ஏதாவதொரு வெகுமானத்திற்கான நம்பிக்கையில் ஒரு பிரசங்கியாரை பின்பற்றும்படி ஒருவேளை நாடக் கூடும். மனுஷர்கள் பணம் சம்பாதிக்கும்படியாக மார்க்க சம்பந்தமான தலைவர்களாகும்படி ஒருவேளை முயற்சி செய்யக் கூடும். ஆனால் கிறிஸ்தவமார்க்கத்தில் இந்த உந்து சக்தியானது ஒரு சிறப்பான உந்து சக்தியாக இருக்கிறதில்லை. மூப்பர்கள் "அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல உற்சாக மனதோடு மந்தையைக் கண்காணிக்க வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது (1பேது.5:2). சில சமயங்களில் ஒரு ஐசுவரியவானாயிருக்கிற ஒரு அங்கத்தினர் தன் பணத்தின் காரணமாக சபையை ஆளுகை செய்ய முடியும் என்று கருதுவார். ஒரு பெரிய காணிக்கைத் தொகையை கொடுக்க முடியும் என்பதினாலே அவருடைய விருப்பங்கள் மதிக்கப்பட வேண்டுமென்று ஒருவேளை அவர் நினைக்கலாம். சபையிலே மரியாதை ஏற்படுவதற்கு அடிப்படையான உண்மை இது அல்ல. பணத்தை விரும்புவது என்பது சபையிலிருந்து எடுத்துப்போடப்பட வேண்டும். இது எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது (1தீமோ.6:10). இது தலைவர்களையும் கெடுத்துப் போடுகிறது, பின்பற்றுகிறவர்களையும் கெடுத்துப் போடுகிறது. இது தகுதியற்ற மனுஷர் தங்களுக்காக வழிநடத்தும் நிலையினை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும்படி செய்கிறது. எந்த மனுஷனும் வழி நடத்துதல் அல்லது பின்பற்றுதலை செய்யாமல் இருக்கக் கடவன்.

3. மாதிரியை பின்பற்றுதல் (மாதிரியைப் போன்று நடந்து கொள்ளுதல்). சபையிலே தலைமை தாங்கி நடத்துவதற்கான உண்மையான அடிப்படை கொள்கை என்னவென்றால் முன் மாதிரியை பின்பற்றுதல். கிறிஸ்தவ மார்க்கத்தில் மனுஷர் தங்களுடைய தலைவர்களை பின்பற்றுகிறார்கள் ஏனென்றால் அவர்கள் தலைவருடைய மாதிரியைப்போன்று நடந்து கொள்ளுகிறார்கள் அல்லது அவர்களைப் போன்று இருக்க விரும்புகிறார்கள். இது உயர்வானதும், சிறப்பானதும் ஆகிய மற்றெதைப் பார்க்கிலும் உகந்த உந்து சக்தியாக இருக்கிறது. இவ்வகையான தலைமை தாங்கி நடத்தும் வகை மிகச் சிறந்த வகையான தலைவர்களை உருவாக்குகிறது. இது ஒரு மனுஷனுடைய தலைமை தாங்கி நடத்தும் திறமை அவருடைய குணாதிசயத்தை சார்ந்து இருக்கும்படி செய்கிறது. மாதிரி அமைப்பானது சபையின் ஆளுகை அமைப்பில் மிக முக்கியமான அடிப்படை கொள்கையாக இருக்கிறது, பின் பற்றுகிறவர்களுக்கு பலம் வாய்ந்த உந்துசக்தியாகவும் இருக்கிறது. ஒரு நல்ல முன்மாதிரியை பின்பற்றுவது மனுஷர்களுக்கு எளிதாயிருக்கிறது. சபை ஆளுகையில் முன் மாதிரியாயிருப்பது மிக முக்கியமான அடிப்படை கொள்கையாயிருக்கிறது. வேதத்திலுள்ள தலைமை தாங்கி நடத்துவதற்கான திறமை குறித்த எல்லா போதனைக்கும் இந்த அடிப்படை கொள்கை ஆதாரமாயிருக்கிறது. இது கிறிஸ்தவர்களுக்கான தலைமை தாங்கி நடத்த புரிந்து கொள்ளுதலுக்கு திறவு கோலாயிருக்கிறது. உலகம் எப்பொழுதும் அறிந்திருக்கிறவகையில் இயேசுவானவர் மாபெரும் முன் மாதிரியாக இருந்தார். வேதாகமம் சொல்கிறது அவர் செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கினார் என்று (அப்.1:2). அவருடைய உபதேசத்துக்கு நாம் கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்தப்படுகிறதில்லை. கிறிஸ்துவானவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு பூமிக்குரிய வெகுமதிகளை வாக்குத்தத்தம் செய்கிறதில்லை. ஆனால் இயேசுவானவர் எல்லாயுகங்களுக்கும் மாபெரும் தலைவராய் இருக்கிறார். வேறெந்த தலைவரைப் பார்க்கிலும் இயேசுவுக்கு தங்களை முழுமையாய் அர்ப்பணித்த மனுஷர் அநேகராய் இருக்கிறார்கள். இது ஏனென்றால் அவர் மனுஷரை தம்மைப் போன்று இருக்கும்படியாக ஆக்க விரும்புகிறார். அவர் முன் மாதிரியின் ஒரு வல்லமையை நமக்குக்



இருப்பதினால், அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. ஒருவனுடைய சுய நீதியின் கிரியைகள் அவனை இரட்சிக்காது (எபே.2:8,9; தீத்து3:5). ஒருவன் தன்னை இரட்சித்துக்கொள்ள தன்னுடைய சொந்த நற்கிரியைகளை நம்புகின்றவிஷயத்தில், அவன் அந்த பாவத்திற்காக மனந்திரும்ப வேண்டும். பவுல் நாமெல்லாரும் பாவஞ்செய்திருக்கிறோம் என்கிறார் (ரோம.3:23). ஆனபடியினால் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கர்த்தர் வந்திருக்கிறார் என வாசிக்கிறோம் (லூக்.19:10). பவுல், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றார் (1கொரி.15:1-4). பேதுரு, ‘‘ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர் களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப் பட்டார்’’(1பேது.3:18) என்றார்.

என்னுடைய நண்பனே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டீர்கள்? நீங்கள் சிறந்த நீதிக்குரிய வாழ்க்கைவாழ்வதின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கிற ஒருவராக இருக்கின்றீர்களா? உங்களுடைய நம்பிக்கையை உங்கள் மேலும் உலக ஆஸ்தியின் மேலும் யாரோ ஒரு மனிதன் மேலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பின் மேலும், அல்லது இவ்வுலகத்தின் வேறு ஏதோ ஒன்றின் மேலும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? பிறகு உங்களுடைய சொந்த உபாயங்களின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயன்று கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் உங்களால் இதைச் செய்யமுடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்துவினாலன்றி வேறொருவராலும் இரட்சிக்கமுடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரணபரியந்தம் பரிசுத்தமாக வாழ்ந்து தேவபக்திக்குரிய ஜீவியத்தைச் செய்யும் போது, அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரமல்ல, பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டையும் தருவதாக வாக்குப்பண்ணி யிருக்கிறார். அதைப்பற்றியது தான் வேதமும் கிறிஸ்தவமும்.

நீண்ட காலங்களுக்கு முன் தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு அடிப்படை உண்மைக் கொள்கையை ஏற்படுத்தினான் அதுவே அன்றும் உண்மையானதாயிருந்தது இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது. அவன், ‘‘கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்’’ (ஏரே.10:23) என்றான். அதை ஏற்றுக்கொள்ள தாழ்மை அவசியம், ஆனால் ஞானமுள்ளவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறான். மீண்டும், நீங்கள் யாரானாலும், எவ்விதமான ஜீவியத்தைச் செய்கிறவரானாலும், நல்லவரோ அல்லது கெட்டவரோ, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி உங்களை துரிதப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் இரட்சிக்கப்பட்டால் மட்டுமே (மாற்.16:16), கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47).

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 32***

**32. தேவாலய வழிபாடு இன்றைக்கு உண்டா?**

1. கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறார்

☐ வசன ஆதாரம் -----------------------------------------------

2. மனுஷர் கைகளால் அவர் பணிவிடை கொள்ளுகிறதில்லை

☐ வசன ஆதாரம் -----------------------------------------------

3. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தேவாலயம் போனார் ☐ வசன ஆதாரம்-

4. சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் உங்களுக்குச் சமாதானம் என்றார்

☐ வசன ஆதாரம் -----------------------------------------------

5. நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்க முடியாது ☐ வசன ஆதாரம்-

6. நீங்களே அந்த ஆலயம் ☐ வசன ஆதாரம் --------------------------

7. தேவனுடைய ஆவி தேவாலயத்திலே இருக்கும் ☐ வசன ஆதாரம்-

8. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் ☐ வசன ஆதாரம்-----------------------------------------

9. அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? என்று சாலமோன் சொல்லவில்லை ☐ வசன ஆதாரம் ---------------------------------

10. உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்


☐ வசன ஆதாரம் -----------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**
**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம்-13**

**மனுஷர் ஏன் தலைவர்களைப் பின்பற்றுகிறார்கள்?**

**வரைகுறிப்பு**

**1. அதிகாரத்தை குறித்த பயம் (வலிமை)**

**2. வெகுமானத்திற்கான வாஞ்சை (வேலை அல்லது லஞ்சம்)**

**3. மாதிரியை பின்பற்றுதல் (மாதிரியைப் போல் நடந்து கொள்ளுதல்)**

**கலந்துரையாடல்**

**1. அதிகாரத்தைக்குறித்த பயம் (வலிமை).** எந்த வகையான அரசாங்கத்திலும் மனுஷர்கள் தங்களுடைய தலைவர்களை ஏன் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவ்வாறான காரணங்களில் ஒன்றுதான் அதிகாரத்தை குறித்த பயம். ஒரு தலைவர் ஒரு ராஜாவைப்போன்று மிகவும் அதிகாரம் நிறைந்த ஒருவராக இருப்பாரேயாகில் அவரைபின்பற்றுகிறவர்கள் அவருக்கு கீழ்ப்படியும்படியாக நிர்பந்தம் செய்யப்படலாம் அப்படிப்பட்ட பின்பற்றுகிறவர்கள் தலைவருக்கு மிகவும் பயப்படுகிறார்கள், அவரை பின்பற்றாதிருக்க பயப்படுகிறார்கள். கிறிஸ்தவம் அங்கத்தினர் அவர்களுடைய வலிமைவாய்ந்த தலைவர்களை பின்பற்றும்படி செய்ய பயன்படுத்துகிறதில்லை. தேவன் ஒருபோதும் மனுஷன் தனக்கு கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்துகிறதில்லை. இயேசு சகல அதிகாரமும் வல்லமையும் உடையவராய் இருந்து அவர் கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்துகிறது இல்லை. அவரை பின்பற்றுகிறவர்கள் தங்களுடைய தெரிந்தெடுத்தலின்படி பின்பற்றுகிறார்கள். இது சபையிலுள்ள தலைவர்கள் விஷயத்திலும் உண்மையாய் இருக்கிறது. அவர்களை பின்பற்றுகிறவர்களை கீழ்ப்படியும்படி பலவந்தம் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை. ஒரு மனுஷன் எவ்வளவு பூமிக்குரிய அதிகாரம் உடையவராயிருந்தாலும் அதைக் குறித்து ஒன்றுமில்லை, அவர் சபையில் உள்ள ஜனங்கள் தன்னைப் பின்பற்றும்படி பலவந்தம் செய்ய முடியாது. எந்த ஒரு சபையில் உள்ள தலைவருமே மற்ற அங்கத்தினர்கள் தனக்கு பயப்படுகிறபடியினால் வழிநடத்தும்படியாக எப்பொழுதுமே முயற்சி செய்ய வேண்டாம். கிறிஸ்தவர்கள் பிசாசுக்கு பயப்பட வேண்டும், ஆனால் அவர்கள் மனுஷருக்கு பயப்படவேண்டிய தேவையில்லை. இயேசு சொன்னார் சரீரத்தை கொல்லுகிறவனுக்குப் பயப்பட வேண்டாம் என்று (மத்.10:28). அரசாங்கத்தில் ஆளுகை செய்கிறவர்கள் ஒருவேளை வலிமையினாலே ஆளுகைசெய்யலாம், ஆனால் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் உள்ளவர்கள் அல்ல. வேதாகமம் சொல்கிறது "அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1யோவா.4:18). எந்த மனுஷனும் தான் சபையிலே பலவந்தத்தினாலே அல்லது மற்றவர்கள் தன்னுடைய அதிகாரத்திற்குப் பயப்படலாம் என்பதற்காக ஒரு தலைவர் ஆகலாம் என்று நினையாதிருப்பானாக.

2. வெகுமானத்திற்கான வாஞ்சை (வேலை அல்லது லஞ்சம்). மனுஷர் தலைவர்களை பின்பற்றும்படி இரண்டாவது உந்தும் சக்தியாக ஒரு வெகுமானத்திற்கான (பரிசுக்கான) வாஞ்சையாக இருக்கிறது. இதன் காரணமாகவே ஒரு மனுஷன் தன் எஜமானுடைய அறிவுறுத்தல்களை பின்பற்றுகிறான். அவர் கொடுக்கப் போகும் ஊதியங்களை அவன் நாடிச் செல்கிறான். ஒரு நபருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்படி லஞ்சம் கொடுக்கப்படக்கூடும் என்பதும் ஒரு காரணமாக இருக்கிறது. அவர்கள் லஞ்சமாக கொடுப்பதை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். உத்தமமான வேலை